

தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வளாகத்தில் ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் சோழவந்தான் ஆ. வெங்கடேசன், மதுரை தெற்கு மு.பூமிநாதன், அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் அருள் ஆகியோர் உடன் உள்ளனர்



குடியாத்தம் காமாட்சி அம்மன் பேட்டையில் உள்ள பேனா வடிவ கொடி கம்பத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கழகக் கொடி ஏற்றினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, அமுலு விஜயன் எம்.எல்.ஏ. – வி.ஏ. அன்பு. எஸ்.சௌந்தர்ராஜன், சத்யானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# நாகர்கோவில் மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் நியமனம்

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**
**நாகர்கோவில் மாநகரம்**

**தலைவர் -** **பீ. முகமது உசேன்**
36, மால்டன் தெரு,
பெண்கள் கிறிஸ்துவ கல்லூரி ரோடு
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629001.

**துணைத் தலைவர்- ஞா. மால்டன் ஜினின்,**
92/333, இருளப்பபுரம்,
கோட்டார் அஞ்சல், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

**அமைப்பாளர்-** **ந. இராமதாஸ்**
103, ஆசாரிமார் வடக்கு தெரு,
கோட்டார்,நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்-**1)மு. சுப்பையா,15பி7/1டி, பிராணாவ் இல்லம், பிருந்தாவன் காலனி, ஒழுகினசேரி, நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம் – 629001. 2)பா. சிபன்,7/1084, கீழதாராவிளை, பழவிளை அஞ்சல், நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம் – 629501. 3)கா.மணிகண்டன்,223/64ஏ, செந்தில் நாடார் காம்பவுண்ட், பீச்ரோடு, பெரியவிளை, கோட்டார் அஞ்சல், நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம்.4)அ. ஜெஸ்டின் பாஸ்கர், 53/4 பி, திருக்குடும்ப கோவில் தெரு,மேல ராமன் புதூர், நாகர்கோவில், கன்னியா குமரி மாவட்டம். 5)லெ.ரமேஷ்,67/37, வெள்ளாளர் கீழத் தெரு,கிருஷ்ணன் கோவில், நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம்.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க.விளையாட்டு
மேம்பாட்டு அணி

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை – 18
நாள்- 22.10.2024

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## நாகர்கோவில் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தலைவர் -** **மா.பாக்தாத்,**
95, பட்டாரியர் கோவில்தெரு,
இடலாக்குடி, கோட்டார் அஞ்சல்,
நாகர்கோவில் – 629 002.

**துணைத் தலைவர் -வே. சத்திய சாய்பாபு,**
13/7, தளவாய் தெரு, வடிவீஸ்வரம்,
நாகர்கோவில்.

**அமைப்பாளர்** **- எஸ்.ஆர். ஹாஜிபாபு,**
10ஏ, வையாலிவிளை தெரு,
இடலாக்குடி,நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** - மு.ரெகு, 210ஏ, வைத்திய நாதபுரம்,கோட்டார் அஞ்சல், நாகர்கோவில்-2, கா. சிவராஜன்,73, சி.டி.எம்.புரம், பறக்கை அஞ்சல்,கன்னியாகுமரி – 629 601.தா.ஜஸ்டின்,22, முதலிமார் வடக்கு தெரு,கோட்டார், நாகர்கோவில் – 629 002.மா. சுந்தர்ராஜ், 4/131, சி.டி. எம்.புரம், பறக்கை அஞ்சல்,கன்னியாகுமரி 629 601. ஜே. சகாய ஆனந்த்,36ஏ5/3313, தெற்கு தெரு, வட்டக் கரை,கோணம் அஞ்சல், நாகர்கோவில்–4.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப்
பகுத்தறிவுப் பேரவை

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை – 18
நாள்- 22.10.2024

போர்டு கார் உற்பத்தி தொடக்கம்!

# தமிழ்நாடு 'ஆசியாவின் டெட்ராயிட்' என்பது மீண்டும் நிரூபணம்!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 23 -

தமிழ்நாட்டில் போர்டு நிறுவனம் மீண்டும் கார் உற்பத்தியை தொடங்கவுள்ளது. இதன் மூலம் 'ஆசியாவின் டெட்ராயிட்' என்ற பெயரை மீண்டும் தமிழ்நாடு நிரூபித்துள்ளது என்று 'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து 22.10.2024 தேதிய 'தினத்தந்தி' தலையங்கத்தில் சில பகுதிகள் வருமாறு:

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் 17 நாட்கள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது, உலகப் புகழ்பெற்ற 500 நிறுவனங்கள் இடம் பெற்ற பார்ச்சூன் பட்டியலிலுள்ள 18 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. சென்னையில் இயங்கி வந்த உலகப் புகழ்பெற்ற கார் கம்பெனியான போர்டு நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளாக மூடப்பட்டு கிடந்தது. சென்னையை தொடர்ந்து கு ஜராத்தில் சனாண்ட் என்ற இடத்தில் தொடங்கிய தொழிற்சாலையையும் டாட்டா நிறுவனத்துக்கு விற்றுவிட்டது. இதே போல், சென்னை தொழிற்சாலையையும் விற்க முயற்சிகள் நடந்தன.

ஆனால், சென்னையில் போர்டு நிறுவனம் தொடர்ந்து செயல்படவேண்டும் என்று முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் முயற்சி மேற்கொண்டார். அமெரிக்கா சென்றிருந்த நேரத்திலும் அந்த நிறுவன அதிகாரிகளை சந்தித்து அழைப்பு விடுத்தார். மீண்டும் கார் உற்பத்தியை தொடங்க முன்வந்தால், தேவையான வசதிகளை செய்து கொடுப்பதாக உறுதியளித்தார். சுற்றுப்





பயணத்தை முடித்துக் கொண்டு, அமெரிக்காவில் இருந்து விமானத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் புறப்பட்ட நேரத்தில், போர்டு நிறுவனத்திடம் இருந்து ஒரு நல்ல செய்தி கிடைத்தது. முதல் அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று சென்னையில் போர்டு நிறுவனம் மீண்டும் உற்பத்தியை தொடங்க முடிவு செய்துவிட்டது என்று நல்ல செய்திதான் அது.

உலகில் முன்னணி கார் நிறுவனமான போர்டு, அமெரிக்காவிலுள்ள மிச்சிகனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. 1995ம் ஆண்டு ரூ.1,700 கோடி முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் 350 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலையை அமைத்த இந்த நிறுவனம் 1996ல் முதல் காரை வெளியிட்டது. முதலில் மகிந்திரா நிறுவனத்தோடு இணைந்து செயல்பட்ட இந்த நிறுவனம், 1998ல் தனியாக செயல்பட தொடங்கியது. அப்போது மேற்கொள்ளப்பட்ட

தொழிற்சாலை விரிவாக்கத்தை கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

அவர் அளித்த பல சலுகைகளால் இந்த தொழிற்சாலையில் 3 ஷிப்டுகளில் வேலை நடந்து, பலவித பெயர்களிலான கார்கள், கார் என்ஜின்கள் தயாரிக்கப்பட்டு உலகிலுள்ள 37 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மீண்டும் 2009ல் ரூ.1,500 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு, அதையும் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தார். இதன் மூலம் ஒரு லட்சமாக இருந்த கார்களின் உற்பத்தி 2 லட்சமாக உயர்ந்தது. இதுதவிர, ஆண்டுக்கு இரண்டரை லட்சம் கார் என்ஜின்களையும் தயாரிக்க தொடங்கியது. கொரோனா காலத்தில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக இந்த நிறுவனம் 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொழிற்சாலையை மூடுவதாக அறிவித்தது. இதனால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழுந்தனர்.

தற்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் 3 ஆண்டுகளுக்கு பிறகு. மூடப்பட்ட அதே செப்டம்பர் மாதத்தில் தொழிற்சாலையை திறப்பதாக அறிவித்தது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்குவதற்கான பணிகள் தொடங்கிவிட்டன.

இதன்மூலம் 12 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த தொழிற்சாலையில் மின்சார வாகனங்கள். அதற்கு தேவையான பேட்டரிகள் உற்பத்தி செய்யப்பட இருக்கிறது. மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் தமிழ்நாடு மேலும் உத்வேகத்துடன் செயல்படும். போர்டு மீண்டும் தமிழ்நாட்டுக்கு வருவதன் மூலம் ஆசியாவின் டெட்ராயிட் என்ற பெயரை மீண்டும் தமிழ்நாடு நிரூபித்துள்ளது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறியுள்ளது.

குடியாத்தத்தில் – பவள விழாவையொட்டி

# கழகக் கொடி ஏற்றி வைப்பு!

## ஏ.பி.நந்தகுமார் – முகமது சகி – அமுலு விஜயன் பங்கேற்பு!

குடியாத்தம், அக். 23 -

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரம் காமாட்சி அம்மன் பேட்டை பகுதியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.தனபால், முன்னாள் நகர மாவட்ட பிரதிநிதி வி.ஆர்.அருணகிரி, முன்னாள் வட்ட அவைத் தலைவர் வா.ரா.மணியரசன் ஆகியோர் நினைவு பீடத்தில், தி.மு.க. பவள விழா ஆண்டை முன்னிட்டு கழகக் கொடி ஏற்றப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட பேனா வடிவ கொடி கம்பத்தில் இந்தக் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி தலைவர், தலைமைக் கழக பேச்சாளர் வி.ஏ.அன்பு தலைமை வகித்தார்.

வரவேற்புரை எஸ். சௌந்தரராஜன் நகரச் செயலாளர், நகர் மன்றத் தலைவர் க.கோ.நெடுஞ்செழியன்,நா.ஜம்புலிங்கம், ம.மனோஜ் வசந்தா, ஆறுமுகம் கவிஞர் த.பாரி பெரிய கோடீஸ்வரன், கே.தண்டபாணி, எஸ். விஜய குமார், த.தீபிகா, இ.தயாளன், விஜயன், திவ்யா, மதிவாணன்,

சத்தியமூர்த்தி, ஆர்.ராமமூர்த்தி, இரா.முத்துக்குமார், ரமேஷ், டைலர் கணேசன், கே.என். தேவன், எஸ்.என்.நீலகண்டன், ஆர்.கதிரவன், அப்துல் மாலிக், ராம் குமார், வினோத், தில்லைவாணன், வி.ஏ.தென்னரசு முன்னிலை வகித்தார்.

வேலூர் மாவட்டக் கழக செயலாளர் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் கழகக் கொடியேற்றி வைத்தார்.

மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமது சகி கல்வெட்டு பலகை திறந்து வைத்தார்

குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன் அவர்கள் பொதுமக்களுக்கு உணவு வழங்கினார்.

நிகழ்ச்சியில் குடியாத்தம் ஒன்றிய குழுத் தலைவர் என்.இ.சத்யானந்தம் மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ்.அரசு, எஸ் பாண்டியன் ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர் ரவி, நத்தம் பிரதீஷ், அ. அன்பரசன், தலைமை பொதுக் குழு உறுப்பினர் கே கண்ணன், மாநில கலை இலக்கிய அணி துணை செயலாளர் கெம்மாங்குப்பம் கோபி, த.புவியர்சி, டி. கிருஷ்ணமூர்த்தி, அர்ச்சனா, நவீன், சங்கர், எம். கார்த்திகேயன் எம்.எஸ். எம்.எஸ்.நகர், எஸ்.எஸ்.பி. பாபு, ந.செ.பிரபாகரன், கு.மொழிமாறன், பூமாலை வாசு, ஏ.எஸ்.அரிகிருஷ்ணன், ரகுநாதன், முத்து, ஏ.வி.மகாலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் நகர கழக செயற்குழு முன்னாள் உறுப்பினர் அ. மதிவாணன் நன்றி கூறினார்.



தேனி வடக்கு மாவட்டம் தருமாபுரி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ – மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., வழங்கினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., பொதுக்குழு உறுப்பினர்கள் தெய்வேந்திரன், முல்லை சேகர், மாவட்டப் பொருளாளர் சுரேஷ் மற்றும் அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி நடைபெற்ற மதுரை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், தனச்செல்வம், மாநகர் மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், சின்னம்மாள், முருகவேல், மாநில நிர்வாகி சம்மட்டிபுரம் கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆசிரியர் வெ.கோவிந்தன்
## அக்டோபர் 23 (2021)



ஆசிரியராயப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**